# சிறப்பு சார்பு நீதிமன்ற, (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்.
# EP.No. 8/2020, E.A.1/2022 in MCOP. 42/ 2015

2022-ம் ஆண்டு ஜுன் திங்கள் 09-ம் நாள் வியாழக்கிழமை 09.06.2022 (ம.சா.2) வது நபரின்வாக்குமூலம் (1969)-ம் ஆண்டின் 54 வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.டி.சிவக்குமார், தலைமை எழுத்தர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்டுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வயது | : |
| த/பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : | | |

<u>2-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1-ம் மனுதாரர் நான் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர் ஆகியோர் ஒரு தாய் வயிற்று மக்கள் என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் ஜப்தி செய்யப்பட்டுள்ள சொத்து 16.04.1986 தேதியிட்ட கிரையப்பத்திரப்படி 2-ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தில்தான் நாங்கள் மூவரும் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 2-ம் எதிர்மனுதாரர் மோகன் இன்றுவரை உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு **EP.No.** 8/2020 -ல் மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட பிறகு 2-ம் எதிர்மனுதாரருக்க சம்மன் சார்வாகி உள்ளது என்றால் அது தெரியாது. அதன் பிறகு 22.06.2020-ம் தேதி என் பெயரிலும், 3-ம் மனுதாரர் பெயரிலும் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே தேதியில் மகேந்திரகுமார் என்பவருக்கு ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1986-ல் மோகன் வாங்கிய சொத்தும், நீதிமன்றத்தால், ஜப்தி செய்யப்பட்ட சொத்தும் இந்த மனுதாரர்களுக்கு கிரையம் கொடுத்த சொத்தும் ஒன்றுதன் என்றால் சரிதான். நீதிமன்றத்தால் ஜப்தி செய்யப்பட்ட பிறகு பெருமாள் என்பவருக்கு இழப்பீடு கொடுப்பதை தவிர்ப்பதற்காக இந்த சொத்தை கூட்டாக சேர்ந்து நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பத்திரபதிவு செய்துக்கொடுத்துள்ளார்கள் என்றால் அவ்வாறு இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. தீர்ப்பாணை தொகையை நீதிமன்றத்திற்கு செலுத்துவதை தவிர்ப்பதற்கதாக இந்த ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.